தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

MC. No. 27/2025

**30.04.2026**

**திருமதி. காவ்யா, த/பெ. அன்பழகன்**

PW : 1

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் B.Com வரை படித்துள்ளேன். எண்கண் என்ற ஊரில் 06.09.2024 ந் தேதி எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் நடந்தது. நான் வீட்டுக்குடித்தனமாக எதிர்மனுதாரர் வீட்டில் குடும்பம் நடத்தினோம். திருமண செலவுகள் இருவீட்டார் செலவு செய்து திருமணம் நடந்தது. எங்கள் தரப்பில் திருமணத்திற்காக ரூ.10,00,000/- செலவு செய்யப்பட்டது. மனுவில் ஏழ்மை குடும்பம் என்று சொல்லியிருப்பதால் ரூ.10,00,000/- க்கு செலவு செய்யப்பட்டது என்றால் 7 பவுன் நகைகளும், சீர்வரிசைகளும் செய்த வகையில் செலவு செய்யப்பட்டது.

இந்த வழக்கு அல்லாமல் சேர்ந்து வாழ்வதற்கான வழக்கு எதுவும் வேறு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. தற்சமயம் என் கணவருடன் சேர்ந்து வாழ விருப்பம் உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய செல்லிட பேசியில் பதிவாகி உள்ள அழைப்புகளை ஆய்வு செய்வதில் எனக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய செல்லிட பேசியில் செல்லிட பேசிக்கு அதிகமாக அழைப்பு வந்துள்ள தினகரன் யார் என்றால் அவர் என் தோழியின் அண்ணன் ஆவார். இந்த நட்பு திருமணத்திற்கு முன்பாகவே இருந்ததா என்றால் ஆமாம், நான் அவரிடம் பேசுவது என் கணவருக்கும் தெரியும்.

என்னுடைய செல்லிட பேசியில் நான் என் கணவரை தவறாக சொல்லியும், தினகரனுடன் கொஞ்சியும் பேசிய குறுஞ்செய்திகள் உள்ளதா என்றால் நான் தவறாக எதுவும் பேசவில்லை. திருமணத்தின்போது எனக்கு சீர் வரிசை சாமான்களை காவல் நிலைய புகாருக்கு பிறகு எடுத்து வந்துள்ளேன். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும், எதிர்மனுதாரர் வீட்டில் இல்லாதபோது நான் வன்முறையாக சாமான்களை எடுத்து வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு திருமணத்தின்போது செய்த நகைகளை நான் வங்கியில் வைத்து ஊதாரி தனமாக செலவு செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. நகைகள் எனது கணவர் பெயரில் தான் வங்கியில் வைக்கப்பட்டுள்ளது. அதற்கான இரசீது என்னிடம்

உள்ளது. 12.06.2025 ந் தேதியில் எதிர்மனுதாரர் சென்று கூடுதலாக தொகைக்கு மாற்றிவிட்டதாக காவல் நிலையத்தில் சொல்லியுள்ளார். அவ்வாறு நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நகைகளை எதிர்மனுதாரர் வங்கியில் கூடுதல் தொகைக்கு மாற்றியுள்ளது தொடர்பாக தற்போது கூறியுள்ளது தொடர்பாக மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

மேற்படி 6 பவுன் நகைகளை வங்கியில் கூடுதல் தொகைக்கு எதிர்மனுதாரர் வைத்தற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் கணவர் என்னை குடித்துவிட்டு கொடுமைப்படுத்தியதாகவும், நான் நன்னிலம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் விசாரணை நடத்தினார்கள். அந்த புகாரின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் எதிர்மனுதாரரை அழைத்து எச்சரித்தார்கள். நன்னிலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் என் கணவர் எதிராக மட்டும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம். மனுவில் மாமியார் கொடுமைப்படுத்தியதாக நான் பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றாலும், அவ்வாறு நடந்திருந்தால் புகாரிலே சொல்லியிருப்பேன் என்றாலும் சரியல்ல.

எனது மனுவில் நான் சாதாரண ஏழ்மையான குடும்பம் என சொல்லியிருப்பதால், என்னிடம் எதிர்மனுதாரர் இடத்தை எழுதி கேட்டார் என்று பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது தோழியின் சகோதரருடன் கூடா நட்பில் இருப்பதால் எதிர்மனுதாரருடன் நான் சேர்ந்து வாழ விரும்பவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருடன் மீண்டும் சேர்ந்து வாழ்வதற்கான பேச்சு வார்த்தைகள் ஏதும் நடந்ததா என்றால் 2 முறை நடந்தது. எதிர்மனுதாரர் பண வசதி கொண்டவர் என்ற நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டுமென்றே மறுப்பதால் எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

நிச்சயத்திற்கு பிறகு திருமணத்திற்கு முன்னரே எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் என்னைப்பற்றி தகவல் கேட்டபோது அதற்கு அரவனங்காடு ஊராட்சி மன்ற தலைவரிடம் தவறாக எதுவும் சொல்ல வேண்டாம் என எனது தந்தை தலைவரிடம் கேட்டுக்கொண்டார் என்றால் அது போன்ற நிகழ்வு எதுவும் நடக்கவில்லை. என்னுடைய கூடா நட்பு விவரம் தெரிந்து அதனை மறைத்து எதிர்மனுதாரரை கட்டாயப்படுத்தி எனக்கு திருமணம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அதனை கண்டித்ததால் தான் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் கூடா நட்பில் இருந்து வருவதாலும், வேண்டுமென்றே எதிர்மனுதாரருடன் வாழ மறுத்து வருவதாலும், எதிர்மனுதாரர் எனக்கு ஜீவனாம்சம் தொகை எதுவும் கொடுக்க கடமை இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.30 19:59:58 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்